செ.வெ. எண்: 597 நாள்:13.10.2011

# பத்திரிக்கை செய்தி

## சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள்.

மாட்சிமைமிகு உயர் நீதிமன்ற உத்தரவிற்கேற்ப, 10.10.2011 முதல், உயர் நீதிமன்ற வளாகத்தில் கீழ்கண்டவாறு விரிவான பாதுகாப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

### I. உயர்நீதிமன்ற வளாகத்தினுள் நுழைவாயில் பற்றிய விவரம்

- ❖ நீதிபதிகளுக்கான நுழைவாயில் - இவ்வாயில் அனைத்து மாட்சிமைமிகு நீதிபதிகள் மட்டும் உயர்நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்குமானதாகும்.
- ❖ உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்து வரும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள், உயர்நீதிமன்ற ஊழியர்கள், பின் வரும் வாயில்கள் வழியே நுழையலாம்: 1) வடக்கு வாயில் 2) ஆவின் வாயில் 3) எஸ்பிளனேடு வாயில் 4) சட்டப் பணிகள் வாயில் மற்றும் 5) தெற்கு வாயில் -A. (உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது) அவர்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை காண்பிக்கும் பட்சத்தில் நுழையலாம். உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இல்லாத வழக்கறிஞர்கள், தற்சமயம் வழக்கறிஞர்கள் சங்கம் வழங்கியுள்ள அடையாள அட்டையை காண்பித்து நுழையலாம்).
- ❖ உயர்நீதிமன்றத்திற்கு வாகனங்களில் வரும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள், உயர்நீதிமன்ற ஊழியர்கள், வடக்கு வாயில், ஆவின் வாயில் மற்றும் தெற்கு வாயில்-A, வழியே நுழையலாம். பதிவாளர் (பொது) அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் கார் ஸ்டிக்கர்கள் உள்ளவர்கள்).

- ❖ நடந்து / வாகனங்களில் வரும் BSNL பணியாளர்கள், அஞ்சல் துறை பணியாளர்கள், வங்கிப் பணியாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் வடக்கு வாயில் வழியாக உயர்நீதிமன்றத்திற்குள் நுழையலாம்.
- ❖ வழக்கறிஞர்களுடன் வரும் பொதுமக்கள் / கட்சிக்காரர்கள், வடக்கு வாயில் மற்றும் ஆவின் வாயில் வழியே, அவரவருடைய வழக்கறிஞர்களிடம் பெறப்பட்ட, பதிவு அலுவலகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விவரங்கள் அடங்கிய அடையாளக் கடிதத்துடன் நுழையலாம். (வழக்கறிஞர்களுடன் வாகனங்களில் வரும் பொதுமக்கள் / கட்சிக்காரர்கள் ஆகியோருக்கும் இது பொருந்தும்)
- ❖ வழக்கு சம்பந்தமாக, வழக்கறிஞர்களுடன் வரும் கட்சிக்காரர்களுக்கு, அடையாளக் கடிதங்கள் வழங்குவதற்கென வடக்கு மற்றும் ஆவின் வாயில்களில் வரவேற்பு அறைகள் அமைக்கப்படும்.
- ❖ பதிவாளர் (பொது) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் உடைய வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் வரும் சமீபத்திய சட்ட பட்டதாரிகள் மட்டுமே வழக்குரைஞர் கழக வாயில் வழியே நுழைய அனுமதிக்கப்படுவார்கள். (உயர் நீதிமன்ற பதிவாளர் (பொது) அவர்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை காண்பிக்கும் பட்சத்திலும் மற்றும் உயர்நீதிமன்ற அடையாள அட்டை இல்லாதவர்கள், தற்சமயம், வழக்கறிஞர்கள் சங்கம் வழங்கியுள்ள அடையாள அட்டையை காண்பித்து நுழையலாம்).
- ❖ பதிவாளர் (பொது) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை உடைய வழக்கறிஞர்கள் மட்டுமே, வழக்கறிஞர்கள் சங்க கிட்டி வாயில் (Wicket gate) வழியே, உயர்நீதிமன்ற வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். (உயர்நீதிமன்ற அடையாள அட்டை இல்லாதவர்கள், தற்சமயம் பார் கவுன்சில் வழங்கியுள்ள அடையாள அட்டையை காண்பித்து நுழையலாம்.)

- ❖ இதர பொதுமக்கள் / வழக்கு சம்பந்தப்பட்டவர்கள் அவரவர்களின் வழக்கறிஞர்களிடமிருந்து பெறப்பட்ட அங்கீகார கடிதம் / பதிவாளர் அலுவலகத்தால் கோரப்பட்டுள்ள விபரங்கள் அடங்கிய படிவத்தை சமர்ப்பித்து உயர்நீதிமன்ற பதிவகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களை கொண்ட வரவேற்பறையில் வழங்கப்படும் அனுமதி சீட்டுகளை பெற்று எஸ்பிளனேடு வாயில் வழியாக உயர்நீதிமன்றத்தினுள் நுழையலாம். மேலும் அவர்கள், ஒட்டுனர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை வாக்காளர் அட்டை, PAN அட்டை, பாஸ்போர்ட் போன்றவற்றை அடையாளச் சான்றாக காண்பிக்க வேண்டும்.
- ❖ நடந்து வரும் சட்டக் கல்லூரி மாணவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை காண்பித்து எஸ்பிளனேடு வாயில் வழியே நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.
- ❖ நடந்து வரும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள், சட்டப் பணிகள் மைய ஊழியர்கள், பதிவாளர் (பொது) அவர்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை காண்பித்து, சட்டப் பணிகள் கட்டிடத்திற்கு அல்லது உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் கிட்டி வாயில் (Wicket Gate) வழியே நுழையலாம்.
- ❖ தமிழ்நாடு சட்டப்பணிகள் குழு ஆணையத்தின் பணியாளர்களின் வாகனங்கள் மட்டுமே சட்டப் பணிகள் வாயில் வழியாக அனுமதிக்கப்படும். மேலும் வழக்கு சம்பந்தமாக வரும் பொதுமக்களின் காரணங்களை ஆய்வு செய்த பின்னரே, அவர்கள் சட்டப் பணிகள் மைய வளாகத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.
- ❖ நடந்து வரும் / வாகனங்களில் வரும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள், உயர்நீதிமன்றப் பணியாளர்கள் தெற்கு வாயில் -A வழியாக உயர்நீதிமன்றத்திற்குள் நுழையலாம். அரசு ஊழியர்கள், காவல்துறை

அதிகாரிகள் அடையாள அட்டைகளை காண்பித்தும், அரசு வாகனங்கள் / வழிக்காவல் வாகனங்கள் மற்றும் பிற துறைகளின் வாகனங்கள், தெற்கு வாயில் ‘A’ வழியாக நுழையலாம்.

- ❖ தெற்கு வாயில் ‘B’ அனைத்து தரப்பினரும் வெளியேறும் வாயில் ஆகும்.
- ❖ சட்டக் கல்லூரி வளாகத்தின் மேற்கு மற்றும் வடக்குப்புறமுள்ள இதர இரு வாயில்களும் நிரந்தரமாக மூடி வைக்கப்படும்.

**<u>II பாதுகாப்பு சோதனை</u>**

- ❖ உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்து வரும் அனைவரும் நீதிமன்ற வாயில்களில் அமைக்கப்பட்டிருக்கும் உலோகத்தைக் கண்டறியும் சாதனம் பொறுத்தப்பட்டுள்ள வாயில் (Door Frame Metal Detectors) வழியாகவே நுழைந்து வர வேண்டும்.
- ❖ உயர் நீதிமன்றத்திற்குள் நடந்து வரும் வழக்கறிஞர்கள், அரசுப் பணியாளர்கள், காவல் துறை அதிகாரிகள், வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள், உயர் நீதிமன்ற அலுவலர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், தபால் அலுவலக ஊழியர்கள், பி.எஸ்.என்.எல்.ஊழியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும், அவர்களது உடைமைகளும் பொதுவாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட மாட்டாது.
- ❖ உயர்நீதிமன்றத்தின் எந்தவொரு வாயில் வழியாகவும் உள்ளே நுழையும் இதர அனைத்து பொது மக்கள் / வழக்கு சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் அவர்களது உடைமைகள் கைகளால் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.
- ❖ பெண்களுக்கென குறிக்கப்பட்டுள்ள நுழைவாயில் வழியாக வருபவர்கள் பெண் காவலர்களால் பரிசோதிக்கப்படுவர்.
- ❖ அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் வைத்துள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர்களைத் தவிர, இதர விற்பனையாளர்கள் உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- அனைத்து வாயில்களும் காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.
- எந்தவொரு வாகனமும் இரவு 08.00 மணி முதல் காலை 08.00 மணி வரை உயர்நீதிமன்ற வளாகத்தினுள் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

**<u>III வாகனங்கள் நிறுத்துவதற்கான ஏற்பாடுகள்.</u>**

- வழக்கறிஞர்கள் / வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் / அலுவலர்கள் / வழக்கறிஞர்களின் குமாஸ்தாக்கள் ஆகியோர் அவர்களுக்கென குறிக்கப்பட்ட எட்டு பிரதான நிறுத்துமிடங்களில் அவர்களது வாகனங்களை நிறுத்த வேண்டும்.
- அனைத்து அரசுத் துறை வாகனங்களும் தெற்கு வாயில் - ஏ வழியாக நுழைந்து, குடும்பல நீதிமன்றத்தின் அருகிலுள்ள பகுதியில் நிறுத்தப்பட வேண்டும்.
- வாகனங்களில் வரும் பொது மக்கள் / வழக்கு சம்பந்தப்பட்டவர்கள், பாதுகாப்பு தொடர்பான சோதனைக்குப் பின்னர் எஸ்பிளனேடு வாயில் வழியாக நுழைந்து, தீயணைப்பு நிலையமருகில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தங்களது வாகனங்களை நிறுத்த வேண்டும்.
- நுழைவு வாயில்களின் இரு பக்கத்திலும் 10 மீட்டர் இடைவெளியில், எந்தவொரு வாகனத்தையும் நிறுத்துவதற்கு அனுமதியில்லை.
- 'No parking' மற்றும் 'ஒதுக்கப்பட்ட வாகன நிறுத்துமிடம்' போன்றவற்றை குறிக்கும் அடையாளப் பலகைகள், அமைக்கப்படும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**